[1972 மார்ச் 6

திருக்கனங்கூரில் கால்வாய் மீது சிறு அணை

*322 வினு—திரு. ந. நாச்சியப்பன் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள திருக்கனங்கூர் கிராமத்திலுள்ள ஏரியின் வாய்க்காலுக்கு சிறிய அணை கட்ட வேண்டும் என்று அந்த கிராம மக்கள் அரசாங்கத்தை கோரியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேம்பாலங்கள்.

*323 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் மேம்பாலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இதற்கு நகரசபை ஏதேனும் பங்குத் தொகை கொடுத்துள்ளதா?

(உ) ஆம் எனில், எவ்வளவு?

(எ) இந்த வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 1971-72-ல் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) & (உ) செலவில் 25 சதவிகிதம் நகராட்சி ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் நிதி பற்றாக்குறையினால், அதை ஏற்க இயலாது என்று அது தெரிவித்திருக்கிறது. அரசினிடம் கடனைக் கோருமாறு தலைமைப் பொறியாளர் நகராட்சியினைக் கேட்டிருக்கிறார்.

(எ) இந்த வேலை 1972-ம் வருட இறுதிக்குள் முடிவடையும்

1972 மார்ச் 6]

திரு. கே. டி. கே. தங்கமணி : திருநெல்வேலியில் அந்த லெவல் கிராஸிங்கில் இருக்கக்கூடிய அந்தப் பாலம் பற்றி இது என்று நான் கருதுகிறேன். நீண்ட காலமாக அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படாமல் இருப்பதால் போக்குவரத்திற்கு மிக இடைஞ்சலாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அந்த மேம்பாலத்தை கட்டி முடிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1972 இறுதிக்குள் முடிந்துவிடும். அதைத் துவக்கிய நேரத்தில் சிலர் ஹைகோர்டில் ரிட் பெட்டிஷன் தாக்கல் செய்தார்கள். பிறகு சிவில் ஸூட் ஒன்று தாக்கல் செய்தார்கள். இதனால் காலதாமதம் ஏற்பட்டது. இப்போது அதைத் துரிதமாக முடிக்க அரசாங்கம் எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இது முடிந்துவிடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மேம்பாலம் கட்டுவதில் அதிகக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது பஸ் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆதலால் இப்போது போட்டிருக்கிற பைபாஸ்-யைத் தவிர்த்து வேறொரு பைபாஸை அமைக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நகராட்சிமன்றத் தலைவரையும், உயர் அதிகாரிகளையும் கலந்தாலோசித்து இப்போது போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் போக்குவரத்தைச் சமாளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தையும் நம் அதிகாரிகள் கவனிப்பார்கள்.

* 324 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் அருகே ரயில்வே பாதையின் குறுக்கே போடப்பட்டுள்ள சாலை மேம்பால வேலைக்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு ?

(இ) இதற்கான மொத்தச் செலவு என்ன?